
## திராவிடத்தால் வாழ்கிறோம்

846

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

10

### பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# ஆதிக்கத்தை வீழ்த்திய கீழப்பாலையூர்!




ராஜராஜன் காலத்தில் சமணப்பள்ளியைக் கொண்டிருந்த ஊர், தஞ்சை பெரிய கோயிலின் தென்புறக் கருவறைச் சுவற்றில் பாலையூரில் இருந்த பெரிய நெல் களம் குறித்த வரலாற்றுக் குறிப்பு என திருவாரூரில் உள்ள கீழப்பாலையூருக்கு வரலாற்றுப் பெருமிதங்கள் ஏராளம் சொல்லப்படுகின்றன.

ஆனால், டெல்டா பகுதியில் நிலவிய கொடூரமான சாதிய- பண்ணை அடிமைத் தனத்திற்குத் தப்பாத பகுதி, என்ற வரலாறு பதிவாகவில்லை. சுற்றியிருந்த சுமார் 50 கிராமங்களிலும் நிலமும் ஆதிக்கமும் விரல் விட்டு எண்ணக்கூடிய பார்ப்பனர்கள் வசம்தான் இருந்தன. ராமசுப்ரமணிய ஐயர், சேஷாத்ரி ஐயர் போன்றோரிடம்தான் கீழப்பாலையூர் மண்ணும் மக்களும் சிக்குண்டு இருந்தனர்.

அக்ரஹாரத் தெருவுக்குள் ஆடு, மாடுகள் நுழையலாம். ஆனால், ஐயர் வயலில் கூலியாட்களாக இருந்த தாழ்த்தப்பட்டவர்கள் நுழைந்துவிடக்கூடாது. பிற்படுத்தப்பட்டவர்கள் ஆடு, மாடுகளை அக்ரஹாரத் தெருவுக்கு வெளியே கொண்டு விடுவார்கள். மீண்டும் மாலையில் அக்ரஹாரத் தெருவுக்கு வெளியே ஆடு, மாடுகளைத் தாழ்த்தப்பட்டவர்கள் விட்டுவிட்டால், பிற்படுத்தப்பட்டவர்கள் இழுத்துச் சென்று கட்டி விடுவார்கள். அவர்களும் செருப்பு போட்டுச் செல்லக்கூடாது.

தாழ்த்தப்பட்டவர்கள் பொதுக்குளத்தில் விரலைக் கூட நனைக்கக் கூடாது. ஆனால், இந்தக் கொடுமைகள் எல்லாம், கீழப்பாலையூருக்குள் திராவிடர் கழகக் கொடி பறப்பதற்கு முன்பு வரைதான். அருகே, இருந்த மஞ்சக்குடி, நரசிங்கம்பேட்டை கிராமங்களில் வேர் விட்டிருந்த திராவிடர் கழகம், அதன் முன்னோடிகளாக இருந்த தளபதி, கல்யாணி, முத்துக்கிருஷ்ணன், சீனிவாசன் பிள்ளை, சிவானந்தம் போன்றோரின் வீரியம் மிக்க களப்பணிகளால் குடவாசல் முழுக்கப் படரத் தொடங்கியது.

மக்களை அலை அலையாய் திராவிடர் கழகத்தை நோக்கி வந்தனர். மஞ்சக்குடி, சேங்காலிபுரம், குடவாசல் ஆகியவை இன்றும் சிறுகிராமங்கள்தான். ஆனால், சாலை வசதியே இல்லாத அந்தக் காலகட்டத்திலேயே பலமுறை இங்கெல்லாம் வந்து சென்றிருக்கிறார் பெரியார். குறிப்பாக, தாழ்த்தப்பட்டோருக்குத் தனிக் கிணறு, தனிப் பள்ளி போன்ற காந்தியடிகளின் கொள்கைகளைப் பின்பற்றி சேங்காலிபுரத்தில் பள்ளிக்கூட கட்டுமான முயற்சிகள் தொடங்கின. ஆனால், 'பொதுப்பள்ளியில் தாழ்த்தப்பட்டோரை அனுமதி, அதுதான் சாதி ஒழிப்புக்கு வழிவகுக்கும்' என போர்க்கொடி தூக்கினார் பெரியார். தனிப் பள்ளி கட்டும் முயற்சி தவிடுபொடியானது.

கீழப்பாலையூர் கிராமமும் தங்கள் சுயமரியாதை காக்க கருப்புச்சட்டையைக் கவசமாக ஏந்தியது. பொதுக் குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டம், கோயில் நுழைவுப் போராட்டம் என இடைவிடாத போராட்டத்தால் ஆதிக்கவாதிகளை வீழ்த்தினர். இன்றும் கீழப்பாலையூரில் சுமார் 40 வீடுகளில் கருப்புச் சட்டையின் இருப்பு இருக்கிறது. கோயில் திருவிழாவைப் பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட சமூகங்கள் இணைந்தே இன்றும் கொண்டாடுகின்றன. ஊர்த்தெருவுக்குள் போகும் சாமி சிலை, தவறாமல் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புக்கும் செல்கிறது.

சாதியத்தின் கோரத்தைத் தணித்து, சமத்துவத்தை ஏந்தி நிற்கும் கீழப்பாலையூரில் இன்றும் அக்ரஹாரம் இருக்கிறது. ஆனால், பார்ப்பனர்கள் யாரும் அங்கே இல்லை. ஐயனார் குளம் அப்படியேதான் இருக்கிறது. ஆனால், 'நான் மட்டும்தான் தண்ணீர் எடுப்பேன்' என்று சொல்ல எவருக்கும் அங்கே துணிச்சல் கிடையாது! காரணம் அது இன்று 'பெரியார் மண்'.

...பயணிப்போம்.

> 2,000 ஆண்டுகால சாதிய இழிவை, பெரியார் சிந்தனைகளால் அரை நூற்றாண்டில் தவிடு பொடியாக்கியிருக்கிறது எங்கள் கிராமம். ஆதிக்கம் தகர்ந்துவிட்டாலும், சாதியின் இருப்புக்கெதிரான களப்பணி இன்றும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.
>
> -வீரையன், திராவிடர் கழகம்



## சாவர்க்கர் வாரிசுகளின் புதிய மன்னிப்பு!

இந்துத்துவ ஆதரவாளரான அர்னாப் கோஸ்வாமியின் 'ரிபப்ளிக்' தொலைக்காட்சியில் ஒளிபரப்பான ஒரு நிகழ்ச்சியில், துருக்கியில் உள்ள 'இஸ்தான்புல் காங்கிரஸ் மையத்தை (Istanbul Congress Center)' இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் அலுவலகம் என உள்நோக்கத்துடன் செய்தி வெளியிட்டுள்ளார். துருக்கி, பாகிஸ்தான் ஆதரவு நிலைப்பாடு எடுத்துள்ளதைச் சுட்டிக்காட்டி, காங்கிரஸ் கட்சி துருக்கியில் கிளை அலுவலகம் வைத்துள்ளது என்று பா.ஜ.க. ஐ.டி. பிரிவுத் தலைவர் அமித் மாளவியாவும், அர்னாப் கோஸ்வாமியும் தவறான தகவலைப் பரப்பியுள்ளனர்.

இதையடுத்து, அர்னாப் கோஸ்வாமி, பா.ஜ.க.வின் ஐ.டி. பிரிவுத் தலைவர் அமித் மாளவியா ஆகியோருக்கு எதிராக காங்கிரஸ் கட்சி கடும் கண்டனத்தைப் பதிவு செய்ததுடன், வழக்குப் பதிவு செய்ய உள்ளதாகவும் அறிவித்தது. எதிர்ப்புகள் எழுந்த நிலையில், 'ரிபப்ளிக்' தொலைக்காட்சி மன்னிப்பைக் கோரியுள்ளது. இதற்கிடையே கர்நாடகாவில் அர்னாப் மற்றும் அமித் மாளவியா மீது, கலவரத்தைத் தூண்டும் நோக்குடன் செயல்படுதல், சமூக அமைதிக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய செயல்களில் ஈடுபடுவது போன்ற பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

தவறான தகவல்களைப் பரப்பி, மக்களிடையே குழப்பத்தை உருவாக்கும் நோக்குடன் பல நேரங்களில் 'ரிபப்ளிக்' தொலைக்காட்சி செய்திகளை வெளியிட்டு மன்னிப்பு கோரியுள்ளது. இப்போதும், காங்கிரஸ் கட்சிக்கு வெளிநாட்டில் அலுவலகம் என வேண்டுமென்றே தவறான செய்தியை வெளியிட்டு, எதிர்ப்பு எழுந்ததும் மன்னிப்பு கேட்டுள்ளனர். சாவர்க்கர் வழி வந்தவர்களுக்கு மன்னிப்பு புதிதல்ல என்றாலும், அவர்கள் பரப்பும் அவதூறுகளை முறியடிக்க வேண்டியது அவசியம் என்பதையே இந்தச் சம்பவம் காட்டுகிறது.

## ஃப்ளாஷ்பேக்





கே.வி.குப்பம் சி.கோபி

### தலைவர் கருத்துக் கேட்பும், பொறுப்பு நியமனமும்...

1991-ஆம் ஆண்டு வேலூர் மாவட்ட அளவில், ஒன்றிய நகர இளைஞர் அணியின் செயல் வீரர்கள் கூட்டத்தை ஆற்காடு நகரில், அன்றைய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.கே.சுந்தரமூர்த்தி அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். கூட்டத்துக்கு அன்றைய மாநில இளைஞர் அணிச் செயலாளர் - இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார். கூட்டத்தில், அவர் கருத்து கேட்டபோது, "அனைத்து நகர ஒன்றியங்களுக்கும் அமைப்பாளர்களை நியமித்து விட்டார்கள். எங்கள் கே.வி.குப்பம் ஒன்றியத்திற்கு மட்டும் அமைப்பாளர் பதவி இன்னும் நியமிக்கப்படவில்லை" என்று நான் கூறியபோது, தளபதி அவர்கள் உற்று கவனித்து, அதற்குப் பிறகு நான் ஒன்றிய அமைப்பாளராக அறிவிக்கப்பட்டேன். மனம் மகிழ்ந்தேன். அப்போது அன்றைய மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் தி.அ.முகமது சகி, டி.ஆர்.கஜபதி எம்.எல்.ஏ. மாவட்ட சிறுபான்மை அமைப்பாளர் அப்துல்லா, ஆற்காடு சரவணன், பாண்டு, ஆகியோர் உடனிருந்தனர்.

– கே.வி.குப்பம் சி.கோபி, மாநில துணைச் செயலாளர், தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

62

### "கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# அம்பலமாகும் பா.ஜ.க.வின் இரட்டை வேடம்!



**ஆளுநரின் அதிகாரம் குறித்து, தி.மு.க. அரசு தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு குறித்து, 14 கேள்விகளுடன் விளக்கம் கேட்டுள்ள குடியரசுத் தலைவரை, 'ஒன்றிய அரசின் குடியரசுத் தலைவர்' என்று தமிழ்நாடு முதலமைச்சர் குறிப்பிடுவது, அரசியல் உள்நோக்கம் கொண்டது என எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றதே?**

ஆளுநர் என்ற பதவியை அரசியல் உள்நோக்கத்திற்காகத் தொடர்ந்து பயன்படுத்தி வரும் பா.ஜ.க.வோ, அதன் நேரடி-மறைமுகக் கூட்டாளிகளோ தமிழ்நாடு முதலமைச்சரை நோக்கி, சுட்டுவிரல் நீட்டத் தகுதியற்றவர்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல், காலம் தாழ்த்தும் நியமனப் பதவியில் உள்ள ஆளுநரின் செயல் என்பது ஜனநாயகத்திற்கும்-அரசியல் சட்ட வழிமுறைகளுக்கும் எதிரானது என்பதை வலியுறுத்தித்தான் தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க. அரசு உச்சநீதிமன்றம் சென்றது.

வழக்கை விசாரித்த நீதியரசர்கள் பர்திவாலா-மகாதேவன் அமர்வு, ஆளுநரின் செயல்பாடுகள் சட்டவிரோதமானவை என்று தீர்ப்பளித்தது. ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும் சட்ட முன்வடிவுகள் மீது முடிவெடுப்பதற்கும், அதுபோல குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவதற்காக அனுப்பப்படுபவை மீது முடிவெடுப்பதற்கும், கால நிர்ணயம் வரையறுக்க வேண்டும் என்பதையும், நீதியரசர்கள் வலியுறுத்தியுள்ளனர். இதற்கு விளக்கம் கேட்டுத்தான் 14 கேள்விகளைத் தொடுத்திருக்கிறார் குடியரசுத் தலைவர் அவர்கள்.

நாட்டின் மிக உயர்ந்த பொறுப்பில் உள்ள குடியரசுத் தலைவர், இதுபோன்ற சட்டப் பிரச்சினைகளில் தலையிடுவது மரபு கிடையாது. நாடாளுமன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவற்றுக்கிடையே சிக்கல்கள் எழும்போது, சட்டத்திருத்தம் உள்ளிட்ட வழிமுறைகள் பின்பற்றப்படும். அதிகார வரம்பு தொடர்பான தீர்ப்பு என்றால், மேல் முறையீடு, சீராய்வு மனு போன்றவை தாக்கல் செய்யப்படும். மசோதாக்கள் மீது முடிவெடுக்க, கால நிர்ணயம் வேண்டும் என்கிற உத்தரவுக்கு, குடியரசுத் தலைவர் விளக்கம் கேட்கும் வகையில் கேள்விகளைத் தொடுத்திருப்பது சட்ட நடைமுறையில் ஏற்புடையதல்ல, என்பதை சட்ட வல்லுநர்கள் பலரும் எடுத்துரைத்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் கேட்டுள்ள கேள்விகள் பலவற்றுக்கு, அந்த வழக்கு தொடர்பான வாதங்களின்போதே பதிலளிக்கப்பட்டுள்ளன. மேலும், மசோதாக்கள் மீது முடிவெடுக்க, காலநிர்ணயம் என்பதை ஒன்றிய பா.ஜ.க. அரசே தனது துறைசார்ந்த அமைச்சர்களுக்கு வலியுறுத்தியுள்ளது. அதனை நடைமுறைப் படுத்தக் கோரியுள்ளது. அதே நேரத்தில், பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் ஆளுநர்களைக் கொண்டு மசோதாக்கள் மீது முடிவெடுக்காமல் இழுத்தடிக்கும் நிலையையும் உருவாக்கி வருகிறது.

இந்த இரட்டை வேடம், தற்போது அம்பலமாகியிருப்பதுடன், உயர்ந்த பொறுப்பு வகிக்கும் குடியரசுத் தலைவரையும் தன் அரசியல் நிலைப்பாடுகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் ஜனநாயக விரோதப் போக்கை, ஒன்றிய பா.ஜ.க. அரசு மேற்கொண்டிருப்பதால்தான், அதனைச் சுட்டிக்காட்டி அறிக்கை வெளியிட்டார், தமிழ்நாடு முதலமைச்சர். குடியரசுத் தலைவரின் மாண்பையும் பாதுகாக்கும் வகையிலேயே செயல்பட்டுள்ளார் இந்திய ஜனநாயகத்தின் பாதுகாவலரான தமிழ்நாடு முதலமைச்சர்.

...வினா தொடரும்.

## கருவூலம்

### புயல் நிவாரண நிதி!

1953-ஆம் ஆண்டு பெரும்புயலில் பாதிக்கப்பட்ட தஞ்சைப் பகுதி மக்களுக்கு உதவி செய்ய, களத்தில் இறங்கியது தி.மு.க. நிதி திரட்டும் பொறுப்பை ஏற்ற கலைஞர் ரூ.25,000-க்கு மேல் நிதி திரட்டி, பொதுச்செயலாளர் அண்ணா அவர்களிடம் அளித்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு, கைத்தறி வேட்டிகளும், புடவைகளும் வாங்கி வழங்கப்பட்டன. கழகத்தின் கோரிக்கையை அடுத்து, கைத்தறித் துணிகளை வழங்க, அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் ஏற்பாடுகளைச் செய்தனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.